கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 06.12.2024. அ.வ.எண். 349/2018. வா.சா. 1. செல்வகுமார் , த/பெ, சண்முகவேல்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு படித்துள்ளேன். என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் லாரி வாடகைக்கு பிடித்து தொழில் செய்து வருகிறேன். என்னுடைய தொழில் செய்யும் அலுவலக முகவரி எது என்றால் சாமளாபுரம் , திருப்பூர் மாவட்டம் மற்றும் அரியலூர் மாவட்டம், ஆலத்தியூர் ஆகும். நான் தற்போது குடியிருக்கும் முகவரி சாமளாபுரம் , திருப்பூர் மாவட்டம் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எதிர்புறத்தில் எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி பூர்வீக சொத்து எனக்கும் எனது சகோதரருக்கும் பாத்தியப்பட்டது என்றால் இன்னும் பிரிபடாமல் உள்ளது. மேற்படி சொத்து என்னுடைய மேற்பார்வையின் கீழ் உள்ளது என்றால் சரியல்ல எனது சித்தப்பாவின் மகன் சௌமியன் மேற்பார்வையில் உள்ளது.

2) தாவா சொத்தினை நான் 2 அயிட்டமாக வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். 01.08.2018 ம் ஆண்டு ஒரே தேதியில் தான் மேற்படி 2 அயிட்ட சொத்துக்களை வாங்கினேன் என்றால் சரிதான். மேற்படி சொத்திற்கான 2 கிரய ஆவணங்களும் அடுத்தடுத்த ஆவணங்கள் என்றால் சரிதான். மேற்படி 2 சொத்துக்களுக்கும் காலை எண். 157/1சி என்பது நத்தம் புறம்போக்கு என்றால் சரிதான். 1 வது பிரதிவாதி எனக்கு தூரத்து உறவினர் என்றால் சரிதான். அவருக்கு வயது தற்போது 70 , 75 இருக்கும் என்றால் இருக்கும்.

ஒப்பம்/- ( R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

தாவாவில் 1 வது அயிட்ட சொத்து கிழபுறமாகவும், 2 வது அயிட்ட சொத்து வடபுறமாகவும் உள்ளது என்றால் சரியல்ல.

3) நான் கிரயம் பெற்ற 1, 2 அயிட்ட சொத்துக்களின் கிழபுறமும், வடபுறமும் ரோடு உள்ளது என்றால் சரிதான். கிழபுறமும், வடபுறமும் உள்ள ரோடு சந்திக்கும் இடத்தில் தான் 1வது பிரதிவாதியின் 1 1/2 செண்ட் பூமி உள்ளது என்றால் சரிதான். மேற்படி 1 1/2 செண்ட் பூமிக்கு தென்புறமும், மேல்புறமும் எனது சொத்து வரைபடத்தின் படி ( வா சா ஆ 12) அமைந்துள்ளது என்றால் சரிதான். 1 வது பிரதிவாதிக்கு வடபுற ரோட்டை ஒட்டி விவசாய பூமி உள்ளது என்றால் சரிதான். அந்த பூமி தென்னந்தோப்பாக உள்ளது என்றால் சரிதான், மேற்படி பூமியில் உள்ள மரங்களில் இருந்து தேங்காய்கள் எடுப்பதற்கு வாகனங்கள் இது நாள் வரை கிழமேல் ரோட்டில் வந்து செல்கிறது என்றால் சரிதான்.

4) வாகனங்கள் வடபுற ரோட்டில் திரும்ப முடியாமல் இருந்ததால் தான் 1வது பிரதிவாதி 1 1/2 செண்ட் இடத்தினை விலைக்கு வாங்கினார் என்றால் சரியல்ல. 1 வது பிரதிவாதி 1 1/2 செண்ட் இடத்தினை நான் ஆக்கிரமிப்பு செய்யும் உள்நோக்கத்தோடு 1 வது பிரதிவாதியை அந்த பூமிக்கு செல்வதற்கு நான் தடை செய்வதற்காக இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 2 அயிட்ட சொத்துக்களையும் நான் வாங்கும் போது சட்டப்படியான கருத்துரையை நான் பெற்றேனா என்றால் வாய்மொழியாகத்தான் பெற்றேன்.

5) கிரய தேதியில் கிரயம் எழுதிக் கொடுத்தவரின் பெயரில் இருந்த பட்டாவை நான்

ஒப்பம்/- ( R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

வைத்திருந்தேனா என்றால் இல்லை பத்திரம் இருந்தது. தாவா 2 அயிட்ட சொத்துக்களையும் நான் சரியான உரிமையாளரிடம் இருந்து வாங்கவில்லை என்றும், கிரயதாரர்களை மிரட்டி தான் நான் தாவா 2 அயிட்ட சொத்துக்களையும் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. தாவா 2 அயிட்ட சொத்துக்களின் மூல பத்திரத்தில் சொத்துக்களின் அளவு முழக்கணக்கில் இருந்தது என்றும் அடிக்கணக்கில் இல்லை என்றால் சரிதான். ஆனால் நான் கிரயம் பெற்றபோது அடிக்கணக்கில் சொத்து விவரம் எழுதப்பட்டுள்ளது என்றால் நில அளவையரை வைத்து அளந்து அடிக்கணக்கில் சொத்து விவரம் எழுதப்பட்டது.

6) நில அளவையரை வைத்து அளந்த வரைபடத்தினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நில அளவையரை வைத்து சொத்துக்களை அளக்கவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக அளந்ததாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. நில அளவையரை வைத்து நான் தாவா சொத்துக்களை அளந்து வாங்கவில்லை என்றும் அதன் பின்னிட்டு நான் அந்த வரைபடத்தை தாக்கல் செய்தால் வழக்கிற்காக சட்டத்திற்கு புறம்பாக பின்னிட்டு தயார்செய்யப்பட்ட ஆவணம் ஆகும் என்றால் சரியல்ல. 01.08.2018 ம் ஆண்டு நான் தாவா சொத்துக்களை விலைக்கு வாங்கினேன் என்றால் சரிதான். 07.10.2018, 10.10.2018 ஆகிய இரு தேதிகளில் பிரதிவாதி எனது சுவாதினத்தை இடையூறு செய்ததாக கூறித்தான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

7) நான் கிரயம் பெற்ற சொத்துக்களின் முன் பாத்தியஸ்தர்களின் அனுபவத்தில் சுமார் 60

ஒப்பம்/- ( R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

வருடங்களாக இருந்தது என்றால் சரிதான். முன் பாத்தியஸ்தர்களுக்கும், இந்த தாவாவின் பிரதிவாதிகளுக்கும் சண்டை சச்சரவு இருந்து வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. முன் பாத்தியஸ்தர்களுக்கும், இந்த தாவாவின் பிரதிவாதிகளுக்கும் சுமார் 60 ஆண்டுகளில் எந்த வித சண்டை சச்சரவு களும் புகார்களும் இருந்ததில்லை என்றால் எனக்கு தெரியாது. 10.10.2018 தேதியில் இந்த தாவாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்துக்களை கிரயம் பெற்றதற்கும் தாவா தாக்கல் செய்ததற்கும் இடையில் 70 நாட்கள் தான் இருந்தது என்றால் சரிதான்.

8) 08.10.2018 ம் தேதியில் நான் கேவியட் மனு வா சா ஆ 5 இந்த தாவாவின் 1 வது பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தான் தாக்கல் செய்தேன் என்றாலும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்குஎதிராக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும் வா சாஆ 5 ஆவணம் 1 வது பிரதிவாதிக்கு எதிராக மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் அந்த விவரங்கள் கூட தெரியாமல் நான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு வரை நானும் 1ம் பிரதிவாதியும் மட்டும் தான் அறிவிப்புகள், வருவாய் துறையினரிடம் கொடுத்த புகார் என்றால் சரிதான். எனது சகோதரர் சென்னையில் Group I DRO வாக அரசுப்பணியில் இருக்கிறார் என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு இந்த வழக்கு பிரச்சனை நடக்கும்போது எனது சகோதரர் எங்கு பணி புரிந்தார் என்றால் கரூரில் பணி புரிந்து வந்தார்.

ஒப்பம்/- ( R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

9) 10.10.2018 ம் தேதியன்று 1 ம் பிரதிவாதி பிரச்சனை செய்ததாக கூறிய தேதியில் தாவா சொத்திற்கு போலிஸார் வந்திருந்தார்கள் என்றால் சரிதான். துணை காவல் கண்காணிப்பாளர், ஆய்வாளர் உட்பட 20 போலிஸார்கள் பஸ்ஸில் வந்தார்கள் என்றால் சுமார் 8 போலிஸார் பஸ்ஸில் வந்தார்கள். பின்னிட்டு சாட்சி போலிஸ் வேனில் வந்ததாக கூறுகிறார். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 1 1/2 செண்ட் இடத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்காக எனது சகோதரரின் துணையோடு அரசு அதிகாரிகளை பயன்படுத்தி நான் தொடர்ந்து 1 ம் பிரதிவாதியை துன்புறுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/- ( R.சுஜாதா)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி